# இலங்கை மற்றும் மொரீஷியஸில் UPI பணப்பரிவர்த்தனை சேவைகள் தொடக்க விழாவில் பாரத பிரதமர், இலங்கை அதிபர் மற்றும் மொரிஷியஸ் பிரதமர் ஆகியோரின் பங்கேற்பு.

பிப்ரவரி 11, 2024

பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், இலங்கை அதிபர் திரு. ரணில் விக்ரமசிங்கே மற்றும் மொரீஷியஸ் பிரதமர் H.E. திரு. பிரவிந்த் ஜக்நாத் ஆகியோர் இலங்கை மற்றும் மொரீஷியஸில் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகமான (UPI) பணப்பரிவர்த்தனை சேவைகளையும், மொரீஷியஸில் ரூபே(RuPay) கார்டு சேவைகளையும் 2024 பிப்ரவரி 12 அன்று பிற்பகல் 1 மணிக்கு காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கின்றனர்.

இந்தியா நிதித் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு மற்றும் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முன்னோடியாக உருவெடுத்துள்ளது. நமது வளர்ச்சி அனுபவங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை நட்பு நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடி அவர்கள் வலியுறுத்தி வருகிறார். இலங்கை மற்றும் மொரீஷியஸுடனான இந்தியாவின் வலுவான கலாச்சார மற்றும் மக்களுக்கு இடையிலான தொடர்புகளைக் கருத்தில் கொண்டு, இந்த அறிமுகமானது வேகமான மற்றும் தடையற்ற டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை அனுபவத்தின் மூலம் பரந்த அளவிலான மக்களுக்கு பயனளிக்கும் என்பதுடன் நாடுகளுக்கு இடையிலான டிஜிட்டல் இணைப்பையும் மேம்படுத்தும்.

இந்த அறிமுகமானது இலங்கை மற்றும் மொரிஷியஸ் நாட்டிற்கு பயணிக்கும் இந்திய குடிமக்களுக்கும், இந்தியாவிற்குப் பயணிக்கும் மொரீஷியஸ் குடிமக்களுக்கும் UPI தீர்வுச் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்யும். மேலும் மொரீஷியஸில் ரூபே(RuPay) கார்டு சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலம், மொரிஷியஸ் வங்கிகள் ரூபே(RuPay) முறையின் அடிப்படையில் கார்டுகளை வழங்குவதற்கும், இந்தியா மற்றும் மொரீஷியஸ் ஆகிய இரு நாடுகளிலும் நிலவும் பணப்பரிவர்த்தனைத் தீர்வுகளுக்கு ரூபே(RuPay) கார்டுகளைப் பயன்படுத்தவும் உதவுகிறது.

புது தில்லி
பிப்ரவரி 11, 2024